செய்தி வெளியீடு எண்: 051 நாள் : 21.01.2016

## பத்திரிக்கை செய்தி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சென்னை மாவட்டத்தில் கீழ்கண்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்கள் மற்றும் ஊதியம்:**

| | |
|---|---|
| அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் காப்பக பணியாளர் | – 12 (ஒரு மாதத்திற்கு ரூ.3000/–) |
| அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் காப்பக உதவியாளர் | – 12 (ஒரு மாதத்திற்கு ரூ.1500/–) |

**வயது:**

| | |
|---|---|
| அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் காப்பக பணியாளர் | – 25–35 வயது, விதவை (ம) ஆதரவற்றோர் – 40 வயது |
| அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் காப்பக உதவியாளர் | – 20–40 வயது, விதவை (ம) ஆதரவற்றோர் – 45 வயது |

**கல்வித்தகுதி:**

| | |
|---|---|
| அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் காப்பக பணியாளர் | – பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி |
| அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் காப்பக உதவியாளர் | – தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |

காலியாக உள்ள மையங்கள் மற்றும் இன சுழற்சி குறித்த விவரங்கள் அந்தந்த பகுதியில் உள்ள குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் வெளிப்படுத்தப்படும். தகுதி வாய்ந்த உள்ளூர் பெண் நபர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அந்தந்த பகுதியில் உள்ள குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம். மேலும், உரிய விண்ணப்பங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் இணையதளமான www.icds.tn.nic.in லிருந்தும் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் வழங்கப்படும் நாள் : 25.01.2016 முதல் 03.02.2016 வரையில்.

**குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 03.02.2016. : மாலை 5 மணி வரை**

இது குறித்து விவரம் வேண்டுவோர் அந்தந்த பகுதியிலுள்ள குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அல்லது கீழ்கண்ட அலுவலரை அணுகலாம்.

**ஒம்/–...**
**இயக்குநர் (ம) குழும இயக்குநர் மற்றும்**
**தேர்வுக் குழுத் தலைவர்,**
2/124, தியாகராயா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**